**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102112

1. District : மாவட்டம் Tenkasi PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 01/2022 Date: நாள் 10.05.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 07.05.2022 17.00 hrs Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 10.05.2022 Time : நேரம் 08.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Taluk Office, Tiruvenkadam Taluk, Tenkasi District. 60 Km North East.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M.ALAGURAJA (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.MUTHIAH
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.12.1970 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் TEACHER (g) Address : முகவரி 2/116, Mela Sivagamiya puram, Sayamalai, Thiruvenkadam Taluk. Tenkasi District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.முகைதீன் பட்டாணி, தாசில்தார், திருவேங்கடம் தாலுகா அலுவலகம், திருவேங்கடம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 10.05.2022-ம் தேதி காலை 08.45 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் J.அனிதா ஆகிய நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது திரு.M.அழகுராஜா என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தென்காசி மாவட்டம் திருவேங்கடம் தாலுகா அலுவலகத்தில் வட்டாட்சியராக பணிபுரியும் திரு.முகைதீன் பட்டாணி பற்றியும் ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தென் சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசியின் வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 10.05.2022-ம் தேதி காலை 09.30 மணிக்கு தென்காசி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.01/2022 u/s 7(a) of the PC Act 1988 as amended by Act 16 of 2018 என வழக்குப் பதிவு செய்தேன். மனுவின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.அழகுராஜா, த/பெ திரு.முத்தையா, க.எண்.2/116, மேல சிவகாமியாபுரம், சாயமலை பாகம் - 2, திருவேங்கடம் தாலுகா, தென்காசி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், விஜிலன்ஸ், தென்காசி மாவட்டம். ஐயா, எனக்கு சொந்த

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

10.5.2022.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

J. Anitha.
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

10.05.22 : 10.10 hrs.

Name: பெயர் J. ANITHA.
Rank: நிலை ......................No. எண் .........
Inspector of Police,
V&AC
Tenkasi. 10.05.22.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

ஊர் தென்காசி மாவட்டம் திருவேங்கடம் தாலுகா மேல சிவகாமியாபுரம் ஆகும். நான் M.A.(English) M.Ed படித்துவிட்டு தற்போது VIP வித்யாலயா நர்சரி அன்ட் பிரைமரி பள்ளி, சாயமலை என்ற பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். எனது தந்தையார் திரு.முத்தையா அவர்கள் கடந்த 29.05.2021ம் தேதி வயது முதிர்வின் காரணமாக இறந்துவிட்டார்கள். அதன்பிறகு 15.12.2021ம் தேதி எனது தாயார் திருமதி.ராஜம்மாள் அவர்களும் வயது முதிர்வின் காரணமாக இறந்துவிட்டார்கள். எங்கள் பெற்றோர்களின் இறப்பை முறைப்படி சாயமலை கிராம ஊராட்சியில் பதிவு செய்து இறப்பு சான்று பெற்றுள்ளோம். எங்கள் பெற்றோருக்கு நான் உட்பட ஐந்து ஆண் மகன்கள், ஒரு பெண் ஆக 6 பேர்கள் வாரிசுகளாக இருக்கிறோம். எனது தந்தையார் திரு.முத்தையா அவர்கள் அரசு பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் ஆசிரியராக பணிபரிந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் பெற்று வந்த நிலையில் 29.05.2021ம் தேதி இறந்துவிட்டபின் எனது தாயார் குடும்ப ஓய்வூதியம் பெற்று வந்தார். அந்த பண பலன்கள் பெறவும், குடும்ப சொத்துக்களை பாகப்பிரிவினை செய்வதற்காகவும் எங்கள் தாயாருடைய வாரிசு சான்றிதழ் தேவைப்பட்டதால், நான் வாரிசு சான்று பெற சமர்ப்பிக்க வேண்டிய மின் ஆளுமை திட்டத்தின்கீழ் வாரிசு சான்று கோரி விண்ணப்பிக்கவும் விண்ணப்பதாரர் கொடுக்கும் விபரம் மற்றம் உறுதிமொழி படிவம் புத்தக கடையில் விலைக்கு வாங்கி அதனை பூர்த்தி செய்து நான் கையெழுத்திட்டு எங்கள் அண்ணன்கள், தம்பிகள் மற்றும் தங்கையிடம் கையெழுத்து பெற்றும், அத்துடன் இணைக்கப்பட்ட அ-1 அறிவிப்பு, இருநபர் வாக்குமூலம், மனுதாரர் வாக்குமூலம் ஆகியவற்றில் VAO மற்றும் RI-யிடம் கையொப்பம் பெற்றும் உறுதிமொழி பத்திரம் ரூ.20/-க்கான பத்திரத்தில் VAO அறிவுரைப்படி தயார் செய்து நோட்டரி பப்ளிக் சான்று பெற்றும் எங்கள் தாய், தந்தையின் இறப்பு சான்றுகளை இணைத்தும் எங்களுடைய சகோதர சகோதரியின் ஆதார் கார்டுகளை இணைத்தும் சாயமலை பகுதி II VAO சான்று பெற்றும், பின்பு பழங்கோட்டை வருவாய் ஆய்வாளரிடம் சான்று பெற்றும் கடந்த 10.03.2022ம் தேதி எங்களது சாயமலை கிராம பஞ்சாயத்து அலுவலகத்தில் செயல்பட்டு வரும் இ-சேவை மையத்திலிருந்து ரூ.60/- செலுத்தி விண்ணப்பித்தேன். அதற்கு விண்ணப்ப எண் TN 7202203103283 என ஒப்புகை சீட்டு வழங்கினார்கள். அதன்பிறகு சுமார் 15 நாட்கள் கழித்து சாயமலை பகுதி II VAO திரு.செல்லத்துரை அவர்களை நேரில் சென்று சந்தித்து எங்கள் வாரிசு சான்று விண்ணப்பம் குறித்து கேட்டபோது நாங்கள் விசாரித்து அனுப்பிவிட்டோம். நீங்கள் திருவேங்கடம் தாசில்தார் அவர்களை பார்த்து சான்று பெற்றுக்கொள்ளலாம் என்று கூறினார். ஆனால் 29.04.2022ம் தேதி என்னுடைய மனு கூடுதல் விபரங்கள் வேண்டி திருப்பி அனுப்பப்பட்டுள்ள

தாகவும், கூடுதல் விபரங்கள் அறிய விண்ணப்பித்த இ-சேவை மையத்தை அணுகவும் என என்னுடைய செல்போன் எண் 9842628274ல் குறுஞ்செய்தி வந்திருந்தது. அதன்படி இ-சேவை மையத்திற்கு சென்று கேட்டேன். அதற்கு அவர்கள் அ-1 அறிவிப்பு, மனுதாரர் வாக்குமூலம், இருநபர் வாக்குமூலம் ஆகியவை பதிவேற்றம் செய்யப்படவில்லை என இருந்ததாக சொன்னார்கள். நான் மீண்டும் மேற்படி சான்றுகளை இணைத்து இ-சேவை மூலம் கடந்த ஏப்ரல் மாதம் அனுப்பினேன். இது சம்மந்தமாக மீண்டும் சாயமலை VAOவை நேரில் பார்த்து கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் ஆவணங்களை அப்லோடு செய்வதால் பிரயோஜனமில்லை. நீங்கள் நேரடியாக தாசில்தார் சாரை சென்று பாருங்கள் என்று சொன்னார். பின்பு 04.05.2022ம் தேதி இரவு 10.00 மணிக்கு மீண்டும் என் செல்போனுக்கு அதேபோல் தகவல் வந்திருந்தது. அதன்பேரில் 05.05.2022ம்தேதி மீண்டும் இ-சேவை மையத்தில் சென்று கேட்டதன்பேரில் அ-1 அறிவிப்பு பதிவேற்றம் செய்யவேண்டும் என்று சொன்னதன்பேரில் மீண்டும் அ-1 அறிவிப்பு பதிவேற்றம் செய்துவிட்டு, அன்றே VAOவை சென்று பார்த்தேன். அப்போதும் அவர் நீங்கள் மீண்டும் மீண்டும் அப்லோடு செய்வதால் வாரிசு சான்று கிடைத்து விடாது. தாசில்தார் சாரை சென்று பார்த்து கேட்டால்தான் கிடைக்கும் என்று கூறினார். அதனால் என்னுடைய மனு மீண்டும் மீண்டும் ஏற்கனவே அனுப்பப்பட்ட ஆவணங்கள் இல்லை என்ற காரணம் கூறி திருப்பப்படுவதால் ஏதோ உள்நோக்கத்தோடு திருப்பி அனுப்பப்படுவதாக உணர்ந்து கொண்டு 07.05.2022ம்தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு திருவேங்கடம் தாசில்தார் அலுவலகம் சென்று பார்த்தேன். தாசில்தார் திரு.முகைதீன் பட்டாணி அவர்கள் அவரது அலுவலக அறையிலுள்ள இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரிடம் சார் நான் எனது தாயார் இறந்துபோனதால் வாரிசு சான்று வேண்டி மனு செய்திருந்தேன். சான்று இன்னும் கிடைக்கவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் ஏதாவது அப்லோடு செய்யாமல் விட்டிருப்பீர்கள் பாருங்கள் என்று கூறிவிட்டு என்னுடைய மனுக்கோப்பை பார்த்து அதில் அ-1 அறிவிப்பு இணைக்கவில்லை மீண்டும் இணைத்து கொடுங்கள் போட்டுவிடுகிறோம் என்று கூறிவிட்டு "ஒரு ரெண்டு ரூபாய் கொடுத்துவிடுங்கள்" என்று கேட்டார். நான் ரெண்டு ரூபாய்ன்னா எவ்வளவு சார். வாரிசு சான்று பெறுவதற்கு கட்டணம் ஏதும் கிடையாதே சார் என்று கேட்டேன். அதற்கு அவர் ரெண்டு ரூபாய்ன்னா ரெண்டாயிரம் தம்பி, அலுவலக செலவுக்கு ரெண்டாயிரம் ரூபாய் கொடுக்கலைன்னா வாரிசு சான்று கிடைக்காது என்று கராறாக கூறிவிட்டார். நானும் வேறு வழியில்லாமல் அப்போதைக்கு சரி என்று சொல்லிவிட்டு வாரிசு சான்று வாங்க லஞ்சமாக பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லாத காரணத்தால் லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் செய்யவேண்டும் என நினைத்துக் கொண்டு வந்து விட்டேன். பின்பு 09.05.2022 ம் தேதி திங்கள்கிழமை எனக்கு பள்ளியில் Exam நேரம் என்பதால் முக்கியமான வேலைகள் இருந்ததால் பள்ளிக்கு சென்று விட்டேன். என்னிடம் எனது

தாயாரின் வாரிசு சான்று வழங்குவதற்கு லஞ்சமாக பணம் கேட்ட திருவேங்கடம் தாசில்தார் திரு.முகைதீன் பட்டாணி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (ஒம்.M.ALAGURAJA) 10.05.2022.

Sir, Received the complaint on 10.05.2022 at 08.45 hrs, conducted confidential enquiry and obtained oral permission from Superintendent of Police, Southern Range, DVAC, Chennai and I registered a case in Tenkasi V&AC Cr.No.01/2022 u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by Act 16 of 2018 on 10.05.2022 at 09.30 hrs. sd.Tmt.J.Anitha, Inspector of Police, V&AC, Tenkasi.10.05.22

இந்த வழக்கின் அசல் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவர்களுக்கும், நகல்களை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். ஒரு நகலை விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

J. Anitha
10.5.22

INSPECTOR OF POLICE
Vigilance and Anti Corruption
Tenkasi Detachment,
Tenkasi.